சுருக்கம்

பள்ளிக்கல்வி – மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் – இணை இயக்குநர் – சில கூடுதல் பொறுப்புகள் / அதிகாரங்கள் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (எக்ஸ்.2) துறை

அரசாணை (நிலை) எண்: 249 நாள்: 16.12.2008

படிக்கப்பட்டவை:

(1) அரசாணை (நிலை) எண் 188, பள்ளிக்கல்வி (யு2) துறை, நாள் 08.11.2001
(2) அரசாணை (நிலை) எண் 4, பள்ளிக் கல்வி (யு2) துறை, நாள் 10.01.2002
(3) அரசாணை (நிலை) எண் 138, பள்ளிக் கல்வி (எக்ஸ்.2) துறை, நாள் 30.6.2008
(4) மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண் 2836/ அ1/08 நாள் 30.7.08 மற்றும் 2.9.08.

--

ஆணை:

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் பள்ளிக் கல்வி இயக்ககத்திலிருந்த இணை இயக்குநர் (மெட்ரிகுலேசன் பள்ளிகள்) பணியிடம் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக ஒரு இயக்குநர் பணியிடம் ஏற்படுத்தப்பட்டு மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்காக தனி இயக்குநரகம் தோற்றுவிக்கப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டன. மேலும் மேலே 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த இரண்டு உதவி இயக்குநர் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்திற்கு மாற்றம் செய்து ஆணையிடப்பட்டது. இரண்டு உதவி இயக்குநர் பணியிடங்களும், உதவி இயக்குநர் (பொது) மற்றும் உதவி இயக்குநர் (நிர்வாகம்) என பிரிக்கப்பட்டு அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டது. அவ்வியக்ககத்திற்கு மேலும் ஒரு இணை இயக்குநர் பணியிடம் தேவை என கருதப்பட்டதால் மேலே 3–ல் படிக்கப்பட்ட அரசாணையில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்திற்கு அனுமதிக்கப்பட்ட இரண்டு உதவி இயக்குநர் பணியிடங்களும் ஒப்புவிக்கப்பட்டு, அவற்றிற்கு பதிலாக ஒரு இணை இயக்குநர் பணியிடம் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டு உதவி இயக்குநர்களால் கவனிக்கப்பட்டு வந்த பொறுப்புகள் இணை இயக்குநருக்கு (மெட்ரிகுலேசன் பள்ளிகள்) அளிக்கப்பட்டுள்ளது. இணை இயக்குநர் பணியிடம் உதவி இயக்குநர் பணி நிலையை விட உயர்நிலையில் உள்ளதால், இணை இயக்குநரால் தற்போது கவனிக்கப்பட்டு வருகின்ற பொறுப்பு / அதிகாரங்களுடன்

மேலும் சில கூடுதல் பொறுப்பு/அதிகாரங்கள் இணை இயக்குநருக்கு அளித்து ஆணை வழங்குமாறு மேலே 4-ல் படிக்கபபட்ட தமது கடிதத்தில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியிருந்தார்.

2. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தில் இணை இயக்குநரால் தற்போது கவனிக்கப்பட்டு வருகின்ற பொறுப்பு / அதிகாரங்களுடன் கீழ்க்கண்ட கூடுதல் பொறுப்பு/அதிகாரங்களை இணை இயக்குநருக்கு வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

(1) மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு 10வது வகுப்பு வரை தற்காலிக அங்கீகாரம் வழங்குதல் (ஆரம்ப அங்கீகாரம் தவிர்த்து)

(2) மெட்ரிகுலேசன்/ மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகள் சார்ந்த ஆய்வறிக்கை- மீளபார்வை செய்து ஆணை/அறிவுரை வழங்குதல்.

(3) பொது வைப்பு நிதியிலிருந்து 75% வரை முன்பணம் வழங்கக் கோரும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் சார்பான விண்ணப்பங்கள் பரிசீலித்து ஆணை வழங்குதல்.

(4) மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகள் முதல்வர்/ ஆசிரியர்கள் / நிர்வாகத்திற்கிடையே ஏற்படும் சச்சரவுகள் சார்ந்த கோரிக்கை குறித்து விசாரணை செய்தல்/ஆணை வழங்குதல்.

(5) மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் தொகை கையாடல்/ சொத்து பிரச்சனை சார்பான புகார்கள் குறித்து விசாரணை செய்தல்.

(6) மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு நீங்கலாக இதர வகுப்புகளில் மாணவர்கள் சேர்க்கை செய்வதற்கு தகுதியுள்ள நேர்வுகளில் (deserving cases) 6 மாதங்கள் மேல் வயது தளர்வு செய்தல்.

(7) மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலக ஆய்வு செய்தல்.

(8) உடைந்த/ உபயோகிக்க இயலாத பொருட்களை மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வர் அலுவலகங்கள் / மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்கக சார்பாக இருப்புப் பட்டியலினின்றும் நீக்கம் செய்தல்.

(9) அரசு நலத் திட்டங்கள் சார்ந்த பணிகள் திட்டமிடுதல் மற்றும் மேம்படுத்துதல்.

(10) தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல் அளிக்கும் அலுவலர்.

-3-